**<u>குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, ஓசூர்</u>**

**<u>(அத்தியாயம் XXIII குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம்)</u>**

**சி. சி. எண். : 110/22**

**அ.சா. : 3**

| | | |
|---|---|---|
| பெயர் | : | திரு.பிரபு |
| தகப்பனார் / கணவர் பெயர் | : | திரு.ஜீவன் |
| ஊர் | : | |
| வட்டம் | : | |
| ஜாதி | : | |
| தொழில் | : | |
| மதம் | : | |
| வயது | : | 39 |

1873-ஆம் ஆண்டின் மெய்யுறுதி சட்டத்தின் படி கீழ்க்கண்ட சாட்சிக்கு மெய்யுறுதி செய்து வைக்கப்பட்டது. **நாள்: 17.08.2023**

**எதிரி ஆஜர்**

**முதல் விசாரணை :** நான் தற்போது தேன்கனிக்கோட்டை காவல் நிலையத்தில் தலைமைக் காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 12.05.2020ம் தேதி காலை 08.30 மணிக்கு பாகலூர் காவல் நிலைய உதவி ஆய்வாளர் திரு.ரவிக்குமார் தலைமையில் நானும் காவலர் திரு.சீனிவாசன் ஆகியோரும் சட்டம் ஒழுங்கு பிரச்சினை சம்பந்தமாக ரோந்து பணியில்இருந்தபோது பாகலூர் பேருந்து நிறுத்தம் விநாயகர் கோயில் அருகில் பொதுமக்களுக்கும் போக்குவரத்திற்கும் இடையூறாக எதிரி சரத்குமார் த/பெ.ராஜப்பா தேர்ப்பேட்டை என்பவர் வாகனங்களை தடுத்து நிறுத்தியும் போதையில் தான் ரவுடி என்று பிரச்சினை செய்து கொண்டிருந்தவரை நாங்கள் கைது செய்து காவல் நிலையத்திற்கு அழைத்துச சென்று காவல் நிலைய உதவி ஆய்வாளர் நிலைய குற்ற எண் 363/2020 சட்டப்பிரிவு 7 (1) (a) CLA Act ன் கீழ் வழக்குப்பதிவு செய்தார். பின்வு 12.05.2020ம் தேதி காலை 10.30 மணியளவில் சம்பவ இடத்தை பார்வையிட்டு உதவி ஆய்வாளர் பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார். பின்பு எதிரையை நீதிமன்ற காவலுக்கு அனுப்பிவைத்தார். நானும் திரு.சீனிவாசனும் எதிரியைக் கைது செய்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பிவைப்பதற்கு உதவியாக இருந்தோம். வழக்கு சம்பந்தமாக உதவி ஆய்வாளர் எங்களை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை** செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டும், குறுக்கு விசாரணை செய்யப்படாத காரணத்தினால், எதிரி தரப்பு குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது .

V AGAVITHAN

DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE NO.1

Digitally signed by V AGAVITHAN

Location: HOSUR

**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, ஒசூர்**
**(அத்தியாயம் XXIII குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம்)**

**சி. சி. எண். : 110/22**
**அ.சா. : 4**

| | | |
|---|---|---|
| பெயர் | : | திரு . சீனிவாசன் |
| தகப்பனார் / கணவர் பெயர் | : | கோவிந்தசாமி |
| ஊர் | : | |
| வட்டம் | : | |
| ஜாதி | : | |
| தொழில் | : | |
| மதம் | : | |
| வயது | : | 37 |

1873-ஆம் ஆண்டின் மெய்யுறுதி சட்டத்தின் படி கீழ்க்கண்ட சாட்சிக்கு மெய்யுறுதி செய்து வைக்கப்பட்டது. **நாள்: 17.08.2023**

எதிரி ஆஜர்

**முதல் விசாரணை :** நான் தற்போது பாகலுர் காவல் நிலையத்தில் முதல்நிலைக் காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 12.05.2020ம் தேதி காலை 08.30 மணிக்கு பாகலுர் காவல் நிலைய உதவி ஆய்வாளர் திரு.ரவிக்குமார் தலைமையில் நானும் காவலர் திரு.பிரபு ஆகியோரும் சட்டம் ஒழுங்கு பிரச்சினை சம்பந்தமாக ரோந்து பணியில்இருந்தபோது பாகலுர் பேருந்து நிறுத்தம் விநாயகர் கோயில் அருகில் பொதுமக்களுக்கும் போக்குவரத்திற்கும் இடையூறாக எதிரி சரத்குமார் த/பெ.ராஜப்பா தேர்ப்பேட்டை என்பவர் வாகனங்களை தடுத்து நிறுத்தியும் போதையில் தான் ரவுடி என்று பிரச்சினை செய்து கொண்டிருந்தவரை நாங்கள் கைது செய்து காவல் நிலையத்திற்கு அழைத்துச சென்று காவல் நிலைய உதவி ஆய்வாளர் நிலைய குற்ற எண் 363/2020 சட்டப்பிரிவு 7 (1) (a) CLA Actன் கீழ் வழக்குப்பதிவு செய்தார். பின்பு 12.05.2020ம் தேதி காலை 10.30 மணியளவில் சம்பவ இடத்தை பார்வையிட்டு உதவி ஆய்வாளர் பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார். பின்பு எதிரையை நீதிமன்ற காவலுக்கு அனுப்பிவைத்தார். நானும் திரு.பிரபுவும் எதிரியைக் கைது செய்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பிவைப்பதற்கு உதவியாக இருந்தோம். வழக்கு சம்பந்தமாக உதவி ஆய்வாளர் எங்களை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை** செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டும், குறுக்கு விசாரணை செய்யப்படாத காரணத்தினால், எதிரி தரப்பு குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது .

V AGAVITHAN

DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE NO.1

Digitally signed by V AGAVITHAN

Location: HOSUR

**<u>குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, ஒசூர்</u>**

**<u>(அத்தியாயம் XXIII குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம்)</u>**

**சி. சி. எண். : 110/2022**

**அ.சா. : 5**

| | | |
|---|---|---|
| பெயர் | : | திரு.ரவிக்குமார் |
| தகப்பனார் / கணவர் பெயர் | : | திரு.கே.ராஜீ |
| ஊர் | : | |
| வட்டம் | : | |
| ஜாதி | : | |
| தொழில் | : | |
| மதம் | : | |
| வயது | : | 58 |

1873-ஆம் ஆண்டின் மெய்யுறுதி சட்டத்தின் படி கீழ்க்கண்ட சாட்சிக்கு மெய்யுறுதி செய்து வைக்கப்பட்டது. **நாள்: 17.08.2023**

எதிரி ஆஜர்

**முதல் விசாரணை :** நான் தற்போது மேட்டுர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 12.05.2020 ம் தேதி காலை 08.30 மணியளவில் நானும் தலைமைக் காவலர் திரு.பிரபு, காவலர் திரு.சீனிவாசன் ஆகியோரும் சட்ட ஒழுங்கு சம்பந்தமாக சட்டம் ஒழுங்கு பிரச்சினை சம்பந்தமாக ரோந்து பணியில்இருந்தபோது கிடைத்த தகவலின் பேரில் பாகலுர் பேருந்து நிறுத்தம் விநாயகர் கோயில் அருகில் பொதுமக்களுக்கும் போக்குவரத்திற்கும் இடையூறாக எதிரி சரத்குமார் த/பெ.ராஜப்பா தேர்ப்பேட்டை என்பவர் வாகனங்களை தடுத்து நிறுத்தியும் வாகனங்களை அடித்து நொறுக்கி தீ வைத்து கொளுத்துவென் என்றும் தமிழக அரசுக்கு களங்கம் ஏற்படுத்தும் வகையில் கூச்சலிட்டுக்கொண்டிருதவரை விசாரிக்க அவர் தான் பெரிய ரவுடி என்றும் தன் மீது கொலை வழக்கு உள்ளது என்று கூறியவரை காலை 09.30 மணிக்கு சம்பவ இடத்தில் கைது செய்து காவல் நிலையத்திற்கு அழைத்துச சென்றேன். பின்பு காவல் நிலைய குற்ற எண் 363/2020 சட்டப்பிரிவு 7 (1) (a) CLA Act ன் கீழ் வழக்குப்பதிவு செய்தேன். நான் பதிவு செய்த மேற்படி முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்பு 12.05.2020 ம் தேதி காலை 10.30 மணியளவில் உதவியாளர்களை அழைத்துக் கொண்டு சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து சம்பவ இடத்தில்

தனிநபர் சாட்சிகள் காந்தராஜ் மற்றும் ராஜகோபால் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **(மேற்படி பார்வை மகஜர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது, மேற்படி மாதிரி வரைபடம் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** மேலும் சாட்சிகள் நாராயணப்பா அருண், பிரபு, சீனிவாசன், காந்தராஜ், ராஜகோபால் ஆகியோர்களை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன். இத்துடன் எனது புலன் விசாரணையை முடித்து எதிரி மீது மேற்கண்ட பிரிவின் கீழ் இறுதியறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டும், குறுக்கு விசாரணை செய்யப்படாத காரணத்தினால், எதிரி தரப்பு குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.**

DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE NO.1

V AGAVITHAN

Digitally signed by V AGAVITHAN
Location: HOSUR